★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55650

நம் நாடு

தி. மு. க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✱ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: கார்த்திகை 1உ வெள்ளி (16—11—56) ★ ★ வெளியூர்: கார்த்திகை 2உ சனி (17—11—56) [இதழ் 136

அசாம் மக்களுக்கு தேபர் உபதேசம்!

"எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலையை அசாமில்தான் திறவ வேண்டும் என்று அந்த மாநிலத்தவர் கூறினால், மேற்கு வங்க மாநிலத்தவர், 'அசாமுக்கு அரிசி தரமுடியாது' என்று, கூறிடக்கூடும்; அப்போது, நிலைமை ஆபத்தானதாக இருக்கும்" என்று தேபர் கூறினாராம்!

"என்னைக் கேட்டால், தனிப்பட்ட முறையில் அசாமில் எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலை திறவுவதில் எனக்கொன்றும் ஆட்சேபமில்லை; ஆனால், தங்கள் கோரிக்கையை வலியுறுத்துவதற்காக மக்கள் கையாளும் முறையைத்தான் நான் ஆட்சேபிக்கிறேன்" என்றும் தேபர் கூறினாராம்!

ஒப்பந்தத்தையும் மீறி திராவிட மக்கள் துரத்தப்படும் கொடுமை

இலங்கை சர்க்காரின் நியாயவிரோதப் போக்கு

சர்க்கார் அதிகாரியிடம் தமிழர் தூதுக்குழு விளக்கம்

கொழும்பு, நவ. 15—

இலங்கையிலிருந்து தமிழர்கள் அநியாயமாக வெளியேற்றப்படும் கொடுமை தொடர்ந்து நடந்துகொண்டிருக்கிறது.

இலங்கைப் பிரதமரும் பண்டித நேருவும் கடந்த 1954-ம் ஆண்டு அக்டோபர் திங்களில் மேற்கொண்ட ஒப்பந்தத்தையும் மீறி, திராவிடர்கள் இலங்கை சர்க்காரால் அடித்துத் துரத்தப்படுகின்றனர் என்று தெரியவருகிறது.

'இலங்கையர்' என்று ஒத்துக்கொள்ளப்பட்டவர்கள்—ஆனால் இன்னும் குடியுரிமை பெறாதவர்கள்—பெற மனுச்செய்திருப்பவர்கள் எல்லாம்கூட வெளியேற்றப்பட்டு வருகின்றனராம்.

இவர்கள் இலங்கையில் தங்கியிருப்பதற்காக ஆறு மாதம், ஒன்பது மாதம், ஒரு வருடம் என்று தற்காலிக 'விசா'க்கள் பெற்றிருந்தனர் என்றும், இந்தக் கால முடிவில் திரும்பவும் தற்காலிக 'விசா'க்கள் தரப்படாமலேயே அவர்கள் செய்து கொண்டிருக்கும் தொழில், வேலை இவற்றை விட்டுவிட்டு வெளியேற்றப்படுகின்றனர் என்றும் தெரியவருகிறது.

'நாடற்றவர்கள்' என்று கருதப்படுபவர்கள்கூட 1954-ம் ஆண்டு ஒப்பந்தப்படி, இரு சர்க்கார்களும் 'இலங்கை இந்தியர்' பிரச்சினையில் இறுதி முடிவுக்கு வரும்வரையில் இலங்கையில் தங்கியிருக்க தற்காலிக 'விசா'க்கள் தரப்பட வேண்டும் என்றும், அவர்கள் செய்யும் தொழில், வேலை இவற்றிலிருந்து அகற்றப்படக் கூடாதென்றும் பாதுகாப்பு அளிக்கப்பட்டிருந்தனர். ஆனால், இந்த ஒப்பந்தத்தையும் மீறி இலங்கை சர்க்கார், திராவிடர்களை, படிப்படியாக அநியாயமாய் வெளியேற்றி வருகின்றனர்.

இந்த நிலைகளை விளக்குவதற்காகத் தோழர் தொண்டமான் தலைமையில், தமிழர்தம் தூதுக்குழு ஒன்று இலங்கை குடியேற்ற இலாகா அதிகாரி ஒருவரைச் சந்தித்துப் பேசியிருக்கின்றது.

அந்த அதிகாரியோ, 'சர்க்கார் வகுத்துள்ள கொள்கையை அமுல் செய்வதே எங்கள் வேலை; கொள்கை பற்றி விளக்கம்பெற சர்க்காரை நாடுக,' என்று கூறிவிட்டாராம்!

கொடுமை தொடருகிறது!

ஆங்கிலோ பிரஞ்சுவாதிகள் சண்டித்தனம்

போர்ட் செய்தில் இராணுவத்தைப் பலப்படுத்துகின்றனராம்

கெய்ரோ, நவ. 14—

ஆங்கிலோ—பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகள் சூயஸ் கால்வாய்த் துறை முகமான போர்ட் செய்திலிருந்து வெளியேறுவர் என்பதற்கான அறிகுறியே இல்லை என்றும், போர்ட் செய்திற்குப் பிரிட்டிஷ் இராணுவ கவர்னர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கிறார் என்றும், போர்ட் செய்தில் மேலும் பிரிட்டிஷ்-பிரெஞ்சுப் படைகள் வலுப்படுத்தப்பட்டு வருகின்றன என்றும் சில வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் தகவல் தந்திருக்கின்றனராம்.

'மகத்தான மக்கள் இயக்கம்'

'ஹங்கேரி விடுதலை எழுச்சி' குறித்து புதிய பிரதமர் காதர்

புடாபெஸ்ட் வானொலிதரும் தகவல்

ஹங்கேரியில் கடந்த சில வாரங்களில் எழுந்த நிகழ்ச்சிகள் அன்னியர் தூண்டுதலின்பேரில்—முதலாளித்துவ, நிலப்பிரபுத்துவ பிற்போக்கு சக்திகள் நடத்திய எதிர்ப்புரட்சியின் விளைவுகள் என்று கூறப்படுவதைத் திட்டவட்டமாக மறுக்கும் வகையில் ஹங்கேரியில் புதியதாக ஏற்படுத்தப்பட்டுள்ள கம்யூனிஸ்டு சர்க்காரின் தலைவரான ஜெனேஸ் காதர், புடாபெஸ்ட் வானொலியில் பேசியிருப்பதாகச் செய்தி கிடைத்திருக்கிறது.

'கடந்த சில வாரங்களில் எழுந்த மக்களின் மகத்தான இயக்கங்களில் பங்கு பெற்றதற்காக எவரும் தண்டிக்கப்பட மாட்டார்கள் என்று உறுதி கூறுகிறேன்' என்பதாக காதர் கூறியிருக்கிறார் என்று புடாபெஸ்ட் வானொலியில் அறிவிக்கப்பட்டிருக்கிறதாகச் செய்தி கூறுகிறது.

தூதுக் குழு

தொழிலாளர் தூதுக் குழு ஒன்று பிரதமர் காதரைச் சந்தித்து சில கோரிக்கைகளைத் தெரிவித்திருக்கிறதாம்.

நாகி பதவிக்கு வரமுடியாதாம்

அந்தத் தூதுக் குழுவினரிடத்தில், 'இப்போதைக்கு நாகி மீண்டும் பதவிக்கு வரமுடியாது; ஏனெனில், அவர் யூகோ தூதுவராலயத்தில் சரண்புகுந்திருக்கிறார்,' என்றும் காதர் கூறினாராம்!

ரஷ்யாவிற்குக் கடத்தப்படுகின்றனரா?

ஹங்கேரிய இளைஞர்கள் ஆயிரக்கணக்கில் ரஷ்யாவிற்குக் கடத்தப்படுகிறார்கள் என்ற செய்தியை அவர் மறுத்ததுடன், ரஷ்ய அதிகாரிகளிடத்தில் கடத்தப்படமாட்டார்கள் என்று ஒரு ஒப்பந்தம் எழுதி வாங்கியிருப்பதாகவும் காதர் கூறினாராம்!

மீண்டும் நாகி!

'மீண்டும் நாகி பதவிக்கு வர வேண்டுமானால், அவர் தன் போக்கினைத் திருத்திக்கொள்ளவேண்டும்; பின்னர், நாங்கள் அவருடன் பேச்சுவார்த்தை நடத்தி ஒரு முடிவுக்கு வரமுடியும்,' என்றும் காதர் கூறினாராம்.

யுரேனியம்

ஹங்கேரியில் தோண்டப்படும் யுரேனியம், உலக விலைக்கு ரஷ்யாவிற்கே விற்கப்படுமாம்.

சட்டம் ரத்து

பண்ணையில் உற்பத்தியாகும் பொருள்களைக் கட்டாயமாக (ரஷ்யாவிற்கு) தந்துவிடவேண்டும் என்ற 1953-ம் ஆண்டுச் சட்டத்தை ரத்து செய்வதாகவும் கூறினாராம்.

இந்தச் சட்டத்தை, சில நாள் பதவியிலிருந்த நாகி சர்க்காரும் ரத்து செய்திருந்தது.

இராணுவத் தலைவருக்குச் சீட்டு

ஹங்கேரிய இராணுவத் தலைவரான ஜெனரல் இஸ்த்வான் பாதா என்பார் முன்னாள் கம்யூனிஸ்டுச் செயலாளர் ரகோசியுடன் தொடர்பு கொண்டிருந்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டு பதவியிலிருந்து சீட்டுக் கிழிக்கப்பட்டிருக்கிறாராம்.

பல ஹங்கேரியக் கம்யூனிஸ்டுத் தலைவர்களும், முன்னாள் மந்திரிகள் உட்பட இப்போதைய கட்சியின் மத்திய கமிட்டியிலிருந்து தூரத்தப்பட்டிருக்கின்றனராம்.

கே. வி. கே. சாமி கொலை வழக்கு விசாரணை

'இராகு காலம் தடை'

தூத்துக்குடி, நவ. 15—

தூத்துக்குடித் தோழர் கே. வி. கே. சாமி படுகொலை வழக்கு இன்று காலை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

வழக்கு விசாரணையை ஒட்டி, நீதி மன்றத்தின்முன் பலத்த போலீஸ் காவல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. எவரும் நீதி மன்றத்திற்குள் அனுமதிக்கப்படவில்லை

இராகு காலம்

வழக்கை நடத்துகிற பப்ளிக் பிராசிகியூடர், வழக்கு விசாரணை 'இராகு கால'த்திற்குப்பின் துவங்கப்பட வேண்டும் என்று கோரினாராம்.

இதை ஒட்டி, எதிரிகளின் வழக்கறிஞர்கள் சில எதிர் வாதங்களைக் கிளப்பினராம்.

இதனால் 11 மணிக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய வழக்கு 3 மணிக்குத்தான் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டதாம்.

எதிரிகள்

வழக்கைத் தொடுத்துள்ள குற்ற இலாகா போலீஸ் இன்ஸ்பெக்டர் பி. பி. சிவா, எதிரிகள் 11 பேர் மீதும் 120 - பி; 148, 302, 147 ஆகிய இ. பி. கோ. பிரிவுகளின் கீழ் குற்றம் சுமத்தினர்.

இரு எதிரிகள், ஏற்கனவே 'அப்ரூவர்'களாக மாறியுள்ளது தெரிந்ததே.

முதல் சாட்சி

போலீஸ் தரப்பில் முதல் சாட்சியாக நடராசன் என்பவர் விசாரிக்கப்பட்டிருக்கிறார்.

அவர் கூறியவைமீது, குறுக்கு விசாரணை தொடர்ந்து நடைபெறும் என்று தெரியவருகிறது.

சர்வதேசப் போலீஸ் படை

பாகிஸ்தான் இராணுவம் இடம் பெறுவதற்கு எகிப்து எதிர்ப்பு

டாக்கா, நவ. 15—

சர்வதேசப் போலீசு படையில் பாகிஸ்தான் இராணுவம் இடம் பெறுவதற்கு எகிப்து எதிர்ப்புத் தெரிவித்திருப்பதாக ஐ. நா. அலுவலகம் பாக். சர்க்காருக்குத் தகவல் அனுப்பியுள்ளதாம்.

இந்தச் செய்தி கராச்சி பத்திரிகை ஒன்றில் வெளியிடப்பட்டிருக்கிறதாம்.

ஹங்கேரியில் ரஷ்ய இராணுவத் தலையீடு!

யூகோ அதிபர் டிட்டோ தரும் விளக்கம்

பெல்கிரேட், நவ. 15—

அமைதி ஏற்பட்டதும் துருப்புகளை ஹங்கேரியிலிருந்து திரும்பப் பெற்றுக் கொள்வதாக ரஷ்யத் தலைவர்கள் தனக்கு உறுதிமொழி தந்திருக்கிறார்கள் என்று யூகோஸ்லாவியா குடியரசுத் தலைவர் டிட்டோ இங்கு கூறியிருக்கிறார் எனத் தெரிகிறது.

யூகோ கம்யூனிஸ்டுக் கட்சியின் பொதுச்செயலாளர் என்ற முறையில் அவர் பேசியதாகக் கூறப்படுவதாவது:—

"தனி நபர் பூசையைக் கண்டிப்பதிலேயே ரஷ்யத் தலைவர்கள் ஈடுபட்டிருப்பது தவறானது; அவர்கள் கண்டிக்க வேண்டியது தனி நபர் வழிபாட்டு முறையை!

"இந்தத் தனிநபர் பூசை, ஒரு இயக்கத்தின் படைப்பு—வெளிப்படையான அம்சம்; இந்த அம்சத்தைத் தோற்றுவிக்கிற அந்த இயக்கத்தை, ரஷ்யத் தலைவர்கள் கண்டிக்க மறுக்கிறார்கள்.

'ஹங்கேரி கம்யூனிஸ்டுக் கட்சியின் முன்னாள் தலைவரான எ. னோ கெரோதே, முதன்முதலில் ரஷ்ய உதவியைக் கோரியது தவறானது; தேவை இல்லாதது.

"ஆனால் இரண்டாவது முறையாக ரஷ்யா இராணுவத் தலையீட்டை மேற்கொண்டு, ஹங்கேரியில் நாகி சர்க்காரை ஒழித்துவிட்டு சோஷலிசத்தைக் காப்பாற்றியிருக்கிறது. அதனால், அந்தத் தலையீடு அவசியமானதாகவும் தோன்றுகிறது. இரண்டாவது தலையீடு, இரு தீங்குகளில் குறைவான தீங்காகும்.

"ரஷ்யா தலையிடாதிருந்தால் குழப்பம், உள்நாட்டுச் சண்டை, எதிர்ப்புரட்சி, மூன்றாவது உலக யுத்தம் இவற்றைத் தோற்றுவித்திருக்கும்.

"சனநாயகப்படுத்துவதா, அல்லது ஸ்டாலினிசத்திற்குத் திரும்புவதா? இதில் எது ஐரோப்பாவில் வெற்றி பெறப்போகிறது என்பதுதான் இப்போதுள்ள கேள்வி.

நம் நாடு
தி.மு.கழக தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 16-11-'56 வெள்ளி

ஓசூர் எதிர்காலம்

ஆந்திர - தமிழக எல்லைச் சிக்கலில் இறுதியான முடிவு காண்பதற்கு, இந்தியப் பேரரசின் அமைச்சர் ஒருவர் இங்கு வர இருக்கிறார். அவர் கூறும் முடிவை ஏற்றுக்கொள்ள இரண்டு அரசாங்கங்களும் உடன்பட்டு இருக்கின்றன.

வருகிறவர் கூறும் முடிவு, இரு சாராருக்கும் திருப்தி தரக்கூடியதாக இருக்கப்போகிறதோ அல்லது தமிழர்களின் நியாயமான கோரிக்கையைக் குலைப்பதாக இருக்கப் போகிறதோ? பின்குறிப்பிட்டபடி ஒரு நிலைமை ஏற்பட்டுவிட்டால், ஆந்திரர்களுக்கும் தமிழர்களுக்கும் இடையில் இருந்துவரும் மனக்கசப்பு மேலும் கூடும் என்பதில் ஐயமில்லை.

ஆந்திர - தமிழக எல்லைத் தகராறு தமிழகத்தின் வடக்கெல்லையை மட்டுமே கொண்டுள்ள பிரச்சினையாகும். அப்பிரச்சினையுடன், ஆந்திர ஆட்சியாளர்களால் இதுவரை அநீதியாகக் கோரப்பட்டு வந்த ஒசூர் விவகாரத்தையும் வருகிற மத்திய அமைச்சரிடம் விடப் போவதாகத் தெரியவருகிறது.

சேலம் மாவட்டத்தில் உள்ள ஒசூரைக் கோருவதற்கு ஆந்திர ஆட்சியாளர்களுக்கு எந்தவித நியாயமும் கிடையாது. தமிழகத்தின் வடக்கெல்லையில் உள்ள தமிழ்ப் பகுதிகளை விட மனமில்லாத பிடிவாதத்தின் விளைவாகவே, எட்டிக்குப் போட்டியாக ஒசூர் பகுதிக்குப் பாத்தியதை கொண்டாட ஆந்திர ஆட்சியாளர்கள் முன்வந்தனர். எனவே, வடக்கெல்லைப் பிரச்சினையுடன் ஒசூர் பகுதியை இணைத்துப் பஞ்சாயத்தாரின் தீர்ப்புக்குவிட சென்னை ஆட்சியாளர்கள் ஒப்புக்கொண்டுள்ளது பொருத்தமற்றதேயாகும்.

மாகாண புனரமைப்புக் குழு சில அடிப்படை நியாயங்களைக் கொண்டு இத்தகு கோரிக்கைகளில் முடிவு கண்டுள்ளது. வழக்குக்குரிய நிலப்பரப்பு, குறிப்பிட்ட ஒரு மாகாணத்தின் எல்லையைத் தொட்டுக்கொண்டு இருக்க வேண்டும் என்பது ஒரு நியாயம். அப்பகுதியில் வாழும் மக்களில் பெரும்பான்மையினர், அதனை இணைக்கக் கோரும் மாகாணத்தின் மொழியைப் பேசுபவர்களாக இருக்க வேண்டும் என்பது இரண்டாவது நியாயம். நிர்வாக வசதி மூன்றாவது நியாயமாகும்.

மேற்குறித்த மூன்று நியாயப்படியும் ஒசூர் பகுதியை ஆந்திர ஆட்சியாளர்கள் கோருவதற்கு இடமே கிடையாது. அவர்கள் கோரிக்கையை அக்கிரமமானது என்றுதான் குறிப்பிட வேண்டும்.

ஒசூலைத் தொட்டுக்கொண்டிருக்கின்ற ஆந்திர [illegible] எல்லை கிடையாது. ஆந்திர மாவட்டமான சித்தூருக்கும் ஒசூருக்கும் இடையில் தமிழர்கள் பெரும்பான்மையினராக வாழும் கிருட்டிணகிரி தாலுகா இருந்துவருகிறது.

அதுவுமன்றி, அங்கு வாழும் மக்களில் முப்பது சத விகிதத்தினர்தான் ஆந்திர மொழி பேசுபவர்களாக இருக்கிறார்கள். நிர்வாக வசதியைக் கொண்டு பார்த்தாலும், தலைநகரான சென்னைக்கும் ஒசூருக்கும் உள்ள தூரத்தைவிட, ஐதராபாத்துக்கும் ஒசூருக்கும் சில நூற்றுக்கணக்கான மைல் வித்தியாசமுடையதாக இருக்கிறது.

உண்மை இவ்வாறு இருக்கும்பொழுது, ஒசூர் விவகாரத்தை வடக்கெல்லைப் பிரச்சினையுடன் ஒன்றுபடுத்தி மத்திய அமைச்சர் பஞ்சாயத்திற்குவிட, சென்னை ஆட்சியாளர்கள் எப்படித்தான் முன்வந்தார்களோ? அவர்கள் உடன்பாட்டில் மறைந்து கிடக்கும் நியாயமான காரணந்தான் என்னவோ?

வடக்கெல்லை விவகாரத்தை, ஆந்திரர்களுக்கும் தமிழர்களுக்கும் மனக்கசப்பு ஏற்படுகின்ற அளவிற்குச் சிக்கல் நிரம்பியதாக ஆக்கிவைத்திருப்பதே இந்தியப் பேரரசுதான் என்பது மறுக்கமுடியாத உண்மையாகும். ஆந்திரப் பிரிவினைக்கு வழி செய்தபொழுதே, எல்லையையும் திட்ட வட்டமாக நிர்ணயம் செய்ய இந்தியப் பேரரசு தாமாக முன்வந்து இருக்குமானால், ஆந்திரர்கள் மீது தமிழ் மக்களுக்கு ஆத்திரம் ஏற்படுவதற்குரிய காரணமே இல்லாது இருந்திருக்கக்கூடும். அதை ஒரு புகலாகக் கொண்டு ஆந்திரர்கள்மீது பகையை ஏவ வேண்டிய வாய்ப்பு, தமிழ் மக்களில் சிலருக்கு இல்லாமலே போயிருக்கும்.

குளமாவது மேடாவது, அவை எங்கிருந்தால் என்ன என்று பேசுகின்ற பச்சைத் தமிழ் அமைச்சர்கள், ஆந்திர ஆட்சியினர் கேட்கின்றனர் என்பதற்காக, அவர்கள் பாத்தியதைக் கொண்டாடுவதற்குத் துளியும் நியாயமற்ற ஒசூர் பிரச்சினையைப் பஞ்சாயத்தார் தீர்ப்புக்குள்ளாக்க முன்வந்திருப்பதை நோக்கும்பொழுது, பஞ்சாயத்தின் தீர்ப்பு குறித்து நாம் அஞ்சவேண்டியவர்களாகவே இருக்கிறோம். அந்த அச்சம், இந்தியப் பேரரசின் சென்றகாலப் போக்கை எண்ணும்பொழுது, மேலும் கூடுதலாகச் செய்கிறது.

ஒசூர் தமிழகத்திற்குத்தான் உரிமையுடையது என்பதற்கான நியாயங்கள் நிரம்ப இருந்தபோதிலும், வடக்கெல்லைத் தமிழ்ப் பகுதிகளைப் பெறுவதற்குரிய விலையாக, ஒசூரை ஆந்திரர்களுக்கு அளித்[illegible] ஆக வேண்டும் என பஞ்சாயத்தார் தீர்ப்பு அமைந்து விடுமானால், அதை நமது பச்சைத் தமிழ் அமைச்சர்கள் உவப்புடன் ஏற்பரே அல்லாது துளியும் எதிர்ப்பு காட்டமாட்டார்கள். மாகாணப் புனரமைப்புக் குழு தீர்ப்புக்கு மாறாக, கேரள அமைச்சர்கள் வற்புறுத்திக் கேட்டார்கள் என்பதற்காகச் செங்கோட்டைப் பகுதியில் காட்டுச் செல்வம் மிகுந்த பகுதியை, கேரளத்திடம ஒப்படைத்துப் புகழ் பெற்றிருப்பவர்கள் அல்லவா நமது பச்சைத் தமிழ் அமைச்சர்கள்?

தமிழ் மக்களிடமிருந்து ஒசூரைப் பிரிக்க வேண்டும் என மத்திய அமைச்சரின் முடிவு இருந்து, அதற்கு நமது பச்சைத் தமிழ் அமைச்சர்களும் இசைந்துவிடுவார்களானால், அதில் தமிழ் மக்கள் வியப்படைவதற்கு ஒன்றுமே இல்லை.

நாடு நலம்பெற நான் செய்ததுஎன்ன?

இந்தக் கேள்வியை மாணவர்கள் கேட்டுக் கொள்ளட்டும்

பொறியியற்கல்லூரியில் 'இலக்கிய இன்பம்' வழங்கி பொதுச்செயலாளர் பேருரை

சென்னை—கிண்டி பொறியியற்கல்லூரியில் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் 13—11—56-ம் நாள் 'இலக்கிய இன்பம்'பற்றி ஆற்றிய பேருரையின் சாரம் கீழே தரப்பட்டுள்ளது:—

வினைஞனும் கலைஞனும்

'உடலை மட்டும் பயன்படுத்தி வேலை செய்பவன் வேலைக்காரன்; உடல் வலுவுடன் அறிவையும் சேர்த்து வேலை செய்பவன் வினைஞன்; உடலையும் அறிவையும்கொண்டு அத்துடன் உணர்ச்சியையும் கலந்து வேலை செய்கிறவன் கலைஞனாகத் திகழ்கிறான்.

"ஒரு கட்டிடம் கட்டும் வேலையை எடுத்துக்கொண்டால் 'இதைச் செய்—அதைச் செய்' என்று ஒருவன் சொல்ல, 'அப்படியே செய்துவிட்டேன்' என்று கூறுகிறவன் வேலையாள்; 'இந்த வேலையை இப்படி இப்படிச் செய்தால் இன்னின்னமாதிரி இருக்குமே' என்று சிறிது அறிவையும் கலந்து வேலை செய்பவன் வினைஞன். அறிவு, உடல் வலு, உணர்ச்சி ஆகிய மூன்றும் ஒன்றுபடும் உணர்வு வந்தால் அங்கே கலை உணர்ச்சி உருவாகிறது.

"எதையும் 'கடனுக்குச் செய்வது' என்றநிலை மாறி ஒவ்வொரு செயலிலும் உங்களுக்குக் கலை உணர்வு பிறக்க வேண்டும். எந்த ஒரு வேலையையும், தனக்குத்தானே திருப்தி தரக்கூடியதாக—சுய திருப்திக்காகக் கடமை உணர்வுடன் செய்தால் கலை உணர்ச்சி தானாகவே தோன்றும்.

"அத்தகுக் கலை ஆர்வம் உள்ளத்தில் எழுச்சிபெறும் வகையில் பொறியியற் கல்லூரி மாணவர்கள் கலை விழா கொண்டாடுவது கான மகிழ்கிறேன்; அத்தகுக் கலை விழாக்களையெல்லாம் நல்ல முறையில் பயன்படுத்த மாணவர்கள் முந்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

"இந்த அடிப்படையை மாணவர்களெல்லாம் நன்றாகப் புரிந்துகொண்டால்தான் வருங்காலத்தில் நாட்டில் ஒரு நல்ல நிலைமையை உருவாக்க முடியும்.

"திறமைமிக்க ஓவியன் மலையையும், அதன் இயற்கை எழிலையும், மலையிலிருந்து பாயும் அருவியையும், அதுபோய் விழும் நீலத்திரைக் கடலையும், இவை போன்ற அழகான இயற்கைக் காட்சிகளையும் தனது ஓவியத்தின் மூலம் காட்டுவான் ஆனால் பாய்ந்துகொண்டிருக்கும் அருவி நீரின் ஓசையையோ, ஓடையின் குளிர்ச்சியையோ, அருகில் நின்றுகொண்டிருக்கும் மலர்ச் செடிகளில் பூத்துக் குலுங்கும் மலர்களிலிருந்து கமழும் வாசனையையோ நமக்குக் காட்ட முடியாது.

"சிற்பி ஒருவன் சிற்பம் செதுக்குகிறான் என்றால், அந்தப் பதுமையில் துக்கக் குறியைக் காட்ட முடியும்; அல்லது மகிழ்ச்சிக் குறியைக் காட்ட முடியும்; வேதனையுற்றிருப்பது போன்ற நிலையில் சிற்பத்தைச் செதுக்கிக் காட்டமுடியும்; ஆனால் அந்தப் பதுமையில் ஆயிரக்கணக்கான உண்மை உணர்ச்சிகளையும் செதுக்கிக் காட்ட முடியாது.

'ஆனால் இலக்கியமோ, அருவியின் எழிலையும் அது எழுப்பும் ஓசையையும் காட்டும்; மலரையும் அதன் வண்ணத்தையும் அது எழுப்பும் மணத்தையும் நுகரச் செய்யும். காதலர்களையும் அவர்கள் உள்ளத்தில் எழும் எண்ணங்களையும், பெருமூச்செறியும் ஏக்கத்தையும், மகிழ்ச்சியையும் ஒருங்கே கொண்டுவந்து நமக்குக் கொட்டித் தரும். எனவேதான், இலக்கியக் கலை மற்றக் கலைகள் எல்லாவற்றையும்விடச் சிறந்த கலையாகும்.

இலக்கியச் சிறப்பு என்ன?

"உணர்ச்சியற்றுக் கிடப்பவர்கள் உணர்ச்சி பெறவும், உள்ளத்திலே எழுச்சியற்றவர்கள் எழுச்சி பெறவும், கடமை உணர்வு குன்றிக் கிடப்பவர்கள் கடமை உணர்ச்சி கொள்ளவும், ஒழுக்கம் கெட்டவர்களுக்கு ஒழுக்கம் கற்றுத் தரவும் இலக்கியத்தால் முடியும்.

"இலக்கியம் நமக்கு அறநெறி கூறும்; பல நன்மைகளைத்தரும் இசை நயமும் இயல் நயமும் கலந்து இலக்கியமாகி, நுணுக்கமான இடங்களுக்கெல்லாம்—நம்மால் நினைக்கமுடியாத இடங்களுக்கெல்லாம்—நாம் முயற்சித்தாலும் கூடச் செல்ல முடியாத இடங்களுக்கெல்லாம் இழுத்துச் செல்லும் தன்மை கொண்டிருக்கிறது.

"இலக்கியத்தின் இந்தத் தன்மைக்குத்தான் 'நயம்' என்று பெயரிட்டிருக்கிறார்கள். அந்த நயம் கொண்ட இலக்கியங்களை எல்லாம் நாம் புரட்டிப் பார்க்கும்போது நம்முடைய அறிவு எழுச்சியுறும்; நம் மனதிலே நல்லதோர் சூழ்நிலை எழும்.

'இலக்கியத்தைப் புரட்டுவதால் என்ன நன்மை? இலக்கியம் பயின்றால் உணவு கிடைக்குமா? நமக்குத் தேவை உணவும் உடையும் தானே?—' என்று எண்ணலாம் ஆனால், எப்படி உடல் வளர்ச்சிக்குக் காற்று தேவையோ, கண்ணுக்கு இனிமைதரப் பூக்கா தேவையோ, அதுபோல், மனித உள்ளத்திலே நல்லதோர் சூழ்நிலை ஏற்பட இலக்கியம் மிக மிகத் தேவை.

'இயற்கையிலிருந்து தவறாமல், உண்மை நிலையை விளக்கமாக—அழகுபட - நயம்பட எடுத்துக் கூறும் இலக்கியங்களை நமது மொழியில் காண்கிறோம்.

"வன்பரணர் என்ற ஒரு புலவரை நமது இலக்கியத்தில் பார்க்கிறோம்; வில் வல்லவனான வல்விலஓரி என்ற பெயருடைய ஒருவனுடைய வில் எறியும் திறனை அவர் வெகு அழகாக - நயம்பட எடுத்துக் காட்டியிருக்கிறார். அந்த வல்வில் ஓரியின் அம்பு எய்யும் திறனைக் குறிப்பிடும்போது அவர் கூறுகிறார்:— 'தன்னை எதிர்த்து வரும் யானை ஒன்றின்மீது தன்னுடைய வில்லில் நாணேற்றி அம்பெய்ய, அந்த அம்பு யானையின் வயிற்றைக் குத்திக் கீறி மறுபுறமாக வெளியே வந்து, அங்கே சீறிவந்து கொண்டிருந்த புலியின் வாய் நுழைந்து வெளியே வந்து, அந்தப் புலியின் பிடியிலிருந்து தப்பித்துக்கொள்ள ஓடிச் சென்று கொண்டிருந்த மானின் மீது தைத்து, அதனையும் ஊடுருவிச் சென்று, அருகே ஓடிக்கொண்டிருந்த முள்ளம் பன்றியையும் குத்திக் கிழித்து, இறுதியில் ஒரு பொந்தில் நுழைந்துகொண்டிருந்த உடும்பின் உடலைக் குத்திவிட்டு அதற்குமேல் செல்லும் வேகம் குறைந்து அப்படியே நின்றது' என்று குறிப்பிட்டிருக்கிறார். அழகான ஒரு கற்பனையின் மூலம் வல்வில் ஓரியின் வில் திறமையை அவர், நயம்பட நமக்கு எடுத்துக் காட்டுகிறார்; அதனை நாம் படிக்கும்போது, அந்த நயத்தில் நாமும் பங்கு கொள்கிறோம்.

அகப்பொருள் இலக்கியம்

'இதுபோலவே, அகப் பொருள் இலக்கியங்களிலும் நயம்பட-அழகுபட பல கற்பனைக் கதைகளைக் காண்கிறோம். ஒரு இடத்திலே காதலர்கள் பற்றிக் குறிப்பிடும் போது ஒரு புலவர் ஒரு கதையை நமக்குக் கூறுகிறார்:— 'பருவமுடைய ஒரு மங்கை; கவர்ச்சிகரமான—காண்போர் வைத்த விழி எடுக்காத அளவிற்கு அழகுள்ள இளங்கை ஒருத்தி செல்கிறாள்; அவளைப் பார்க்கின்றான் ஒரு கட்டிளங்காளை; இளம்பெண்ணைக் கண்ட அவன், அவள்மீது மையல் கொள்கிறான்—மயக்கம் அடைகிறான்—காதல் கொள்கிறான்; பல நாள் பார்த்துப் பார்த்து ஏங்குகிறான்; அவளை அடைய எத்தனையோ நாள் தவிக்கிறான்—என்னென்ன முயற்சியெல்லாமோ செய்கிறான்; பலமுறை கண்சாடை செய்கிறான்; என்றாலும் அவள் அவனுக்கு இணங்கவில்லை; இறுதியில் அவளிடமே நேரில் கேட்டுவிடுவதெனத் துணிந்து தன் விருப்பத்தைக் கூறுகிறான்; ஆனால் அவளோ, அவனுக்கு ஒப்புதல்தர மறுக்கிறாள்; 'உன்னை அடையாவிட்டால் உயிர்வாழ மாட்டேன்,' என்று கூடக் கூறுகிறான்; அதற்கும் அவள் அசையவில்லை. இறுதியில் அவனாகவே தனக்கு ஒரு திருப்தி ஏற்படுத்திக் கொள்கிறான்—'உன்னைச் சொல்லிப் பயனில்லை; உன் மீது தவறில்லை; உன்னை வெளியே வரவிட்டார்களே அவர்கள்மீதும் தவறில்லை; ஆனால், இருக்கும் தவறெல்லாம் இந்த நாட்டு அரசனிடம்தான் இருக்கிறது,' என்று தனக்குத்தானே கூறுகிறான். அரசன்மீது எப்படி தவறு இருக்கிறது என்பதை புலவர் விளக்குகிறார்—அரசனின் அரண்மனையிலிருந்து மதம் பிடித்த யானை ஒன்றை நீர்த்துறைக்கு ஓட்டிச் செல்லும்போது, அந்தப் பாகன், மக்களுக்கு எப்படி 'மதயானை வருகிறது; எல்லோரும் விலகிவிடுங்கள் — ஓடி ஒளிந்து கொள்ளுங்கள்,' என்று கூறுவதற்காகப் பறையறைந்து வருவானோ, அதுபோல, 'இந்த ஊரில் இப்படி ஒரு அழகான மங்கை இருக்கிறாள்; அவள் வெளியே வருகிறாள்; யார்யாரால்லாம் இவளது அன்பைப்பெற முடியாதோ அவர்கள் எல்லாம் இப்போதே ஓடி ஒளிந்து கொள்ளுங்கள்,' என்று கூறாதுவிட்டான்; அதுதான் அரசன் செய்த தவறு —என்று கருதுவதாகக்கூறுகிறார்.

"படிக்கப் படிக்க, இத்தகு இன்பம் பொங்கும் அளவிற்கு நமது இலக்கியங்களிலே நயத்தைக் காண்கிறோம். அந்த இலக்கியங்களெல்லாம், நாம் கீழ்நிலைக்குச் சென்றுவிடாமல் உயர்நிலையிலிருக்கும் படியேவைத்து நயத்தைக் காட்டுகின்றன.

"இதுபோலவேதான் நற்றிணையிலும், புறநானூறுகளிலும் நாம் இலக்கிய நயங்களைக் காண்கிறோம். (இந்த இடத்தில் பொதுச்செயலாளர் அவர்கள், வேற்றூர் சென்ற தலைவனை எண்ணி ஏங்கி, அவன் வரவை எதிர்பார்த்துக்கிடக்கும் தலைவியைத் தோழி தேற்றுகை

(4-ம் பக்கம் பார்க்க)

சென்னை கல்லூரித் தமிழ் மன்ற 2-வது ஆண்டுவிழா

பி. டி. இராசன் தலைமை தாங்கினர்

இரா. நெடுஞ்செழியன், மு. வரதராசனர் சொற்பொழிவு

சென்னை, நவ. 13—

சென்னைக் கல்லூரித் தமிழ் மன்றத்தின் இரண்டாம் ஆண்டுத் துவக்கவிழா நேற்று மாலை 6-மணிக்கு, சென்னை—நுங்கம்பாக்கம் லயோலா கல்லூரி பெர்ட்ரம் மண்டபத்தில் மிகச் சீரும் சிறப்புமாக நடைபெற்றது.

இந்த விழாக்கூட்டம் சற்றுத் தாமதமாக மாலை 6-மணிக்குத் துவங்கிற்று.

4-மணியளவிலேயே மாணவர் பெருங்கூட்டம் மண்டபத்தில் திரண்டிருந்து தலைவர்களின் வருகைக்காகக் காத்துக் கொண்டிருந்தது.

5-மணிக்கெல்லாம், மண்டபம், மாணவர் கூட்டத்தினரால் நிரம்பி வழிய ஆரம்பித்தது. மண்டபத்தின் உள்ளும் புறமும் திரண்டிருந்த ஆயிரக்கணக்கான மாணவர்கள், தலைவர்கள் வருவதற்குக் காலதாமதமாகியும்கூட, அமைதி இழக்காமல் மிகுந்த கட்டுப்பாட்டுடனும், கண்ணியத்துடனும் ஒழுங்கான முறையில் இருப்பிடங்களில் அமர்ந்திருந்தனர்.

சாதாரணமாகக் குறிப்பிட்ட காலத்திற்குள் கூட்டத்தை ஆரம்பிக்காவிட்டால் பரபரப்பை உண்டு பண்ணும் மாணவர்கள், நேற்றையக் கூட்டம் துவங்கக் குறிப்பிட்ட நேரத்தைவிட சுமார் 1½ மணி நேரம் ஆகியும் கூட அமைதியாக இருந்த அம்மாணவர் கூட்டத்தின் கட்டுப்பாட்டு உணர்ச்சியைக்கண்ட எவரும் அவர்களைப் பாராட்டாமல் இருக்கமுடியாது!

6-மணிக்கு திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும், தமிழவேள் பி. டி. இராசன் அவர்களும், பேராசிரியர் டாக்டர் மு. வரதராசனர் அவர்களும் மண்டபத்திற்குள் நுழைந்தனர்.

மண்டப நுழைவு வாயிலிலிருந்து மேடைக்குச் சென்று இருப்பிடங்களில் அவர்கள் அமரும்வரை மாணவர்கள் எழுப்பிய கையொலி மண்டபத்தையே அதிரவைத்ததெனின் மிகைபடக் கூறுவதாகாது!

நாட்டு வாழ்த்துப் பாடலுடன் கூட்டம் ஆரம்பமாயிற்று.

லயோலா கல்லூரி மாணவர் செயலாளர் தோழர் சோமசுந்தர பாண்டியன் சென்னைக் கல்லூரித் தமிழ் மன்றத்தின் ஆண்டறிக்கையை வாசித்தார்.

அதன் பின்னர், தமிழ் மன்றச் சார்பில், பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், பி. டி. இராசன், மு. வரதராசனர் ஆகியோருக்கு மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டன.

பின்னர், மாணவர் தலைவர் தோழர் நடராசன் பி. டி. இராசன் அவர்களைத் தலைமை தாங்குமாறு கேட்டுக் கொண்டு சிறிது நேரம் உரையாற்றினர். அவர் தமது உரையில், ஒவ்வொரு கல்லூரியும் தனக்குரித்தான முறையில் தமிழ்ப்பணியாற்றி வருகிறது என்றும், இந்த மன்றம், எல்லாக் கல்லூரிகளும் ஒன்று சேர்ந்து—மல்லி, சண்பகம் போன்ற மலர்களெல்லாம் ஒன்று சேர்ந்து மணம் கமழும் மலர் மாலைபோல்—தமிழ் மணம் பரப்பி விளங்குகிறது என்றும், அத்தகு மன்றத்திற்குத் தமிழ் பேரறிஞர்களின் ஊக்கமும் ஆக்கமும் தேவை என்றும் கேட்டுக் கொண்டார்.

தலைவர்களைக் கூட்டத்தினருக்கு அறிமுகப்படுத்துங்கால் அவர் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், பி. டி. இராசன், மு. வரதராசனர் ஆகிய மூவரையும் 'முடியுடைத் தமிழ் வேந்தர்கள்' என்று குறிப்பிட்டார்.

பி. டி. இராசன் அவர்களைத் தலைமை தாங்குமாறு அழைத்துப் பேசுகையில் அவர், 'நமது தமிழ்ப் பகுதியின் பறிபோனது கண்டு வருந்தினோம்; அவற்றைத் திரும்பப் பெறுவதற்காகத் தாங்கள் நடத்தின அணிவகுப்பு கண்டு மகிழ்ந்தோம்; என்றாலும் தாங்கள் பாடுபட்ட முயற்சி பலன் இல்லாது போனதற்காக வருந்துகிறோம்; மாணவர்களாகிய எங்களிடையே கட்சிகள் இல்லை; ஆனால் அரசியலிலே ஆர்வங் கொண்ட மாணவர்களாகிய நாங்கள், வருங்காலத் தமிழகத்திற்காக எதையும் செய்வோம் என்று உறுதி கூறிக் கொள்கிறேன்' என்று குறிப்பிட்டார்.

பின்னர், தமிழவேள் பி. டி. இராசன் அவர்கள் விழாவிற்குத் தலைமை வகித்து, மாணவர்கள் அரசியல் ஈடுபாடு எத்தகையதாக இருக்க வேண்டுமென்று கூறி, தமிழ் மன்றம் வாழ, வளரத் தமது வாழ்த்துதலையும் ஆசியையும் அளித்தார்கள்.

அடுத்து டாக்டர் மு வரதராசனர் அவர்கள் மேலைநாட்டு மொழித் தொடர்புக்கும் நம்நாட்டு மொழித் தொடர்புக்குமுள்ள வேறுபாடுகளைக்கூறி, நமதுமொழி இலக்கியம், இசையைப் போன்றது என்று குறிப்பிட்டுவிட்டு, இந்த நாட்டிற்கு இன்னும் தமிழ்நாடு என்ற பெயரில்லாதது, மாணவர்களெல்லாம் வெட்கத்தோடு உணர வேண்டிய செய்தி என்று குறிப்பிட்டார்.

மேலும் அவர், 'இந்த நாட்டின் ஆட்சிமொழி தாய்மொழி—தமிழ் மொழியாகத்தான் இருக்க வேண்டும்' என்று வலியுறுத்திக் கூறினர்.

இறுதியில் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், மாணவர்களின் நீண்ட கைதட்டலுக்கிடையே எழுந்து மாணவர்களுக்கெல்லாம் அரியதோர் கருத்துரை வழங்கினர்.

தமிழ்மொழி—தமிழ் இலக்கியங்களின் சிறப்பு குறித்தும், நாம் நமது இறந்த கால வரலாற்றைத் திரும்பிப் பார்ப்பதற்கான காரணங்களை விளக்கியும், வருங்காலத் தமிழ் நாட்டை வளமுள்ளதாக ஆக்கும் பெரும் பொறுப்பு இந்தத் தலைமுறையினராகிய மாணவர்களையில் இருக்கிறது என்பதையும் குறிப்பிட்டுப் பேசினர்.

பொதுச்செயலாளர் அவர்கள் தமது உரையை முடித்ததும் மாணவர்கள் மீண்டும் நீண்டதோர் கையொலி எழுப்பி தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டனர்.

பின்னர் தலைவர் பி டி. இராசன் அவர்கள் முடிவுரைக்குப்பின், மன்றக்காப்பாளர் திருமதி கைலாசம் அவர்கள் வந்திருந்த அனைவருக்கும் மன்றத்தின் சார்பில் நன்றி கூறினர்.

இறுதியில் நாட்டுப் பண்ணுடன் விழா இரவு சுமார் 8-30 மணிக்கு இனிது முடிவுற்றது

★

பெருஞ்செயலாற்ற!

மாணவர்களை அழைக்கிருர் திரு. பி. டி. இராசன்

"நமது நாட்டிற்குத் தமிழ்நாடு என்று பெயரிட வேண்டுமென்பதற்காகத் தமிழர்களெல்லாம் ஒன்று திரண்டுப் போராடினார்கள்; என்றாலும், அதில் நான் நினைத்த அளவிற்கு வெற்றி பெறவில்லை. எங்கள் காலத்தில்தான் அந்த வெற்றி கிடைக்காவிட்டாலும் மாணவர்களாகிய உங்கள் காலத்திலாகிலும் அவ்வெற்றி கிடைத்தே தீரும் என்பதில் எனக்குச் சந்தேகமே இல்லை.

"மாணவர்கள் மத்தியில் அரசியல் காரியங்களைப் பற்றிப் பேசினால் வேறு சிலர் என்னை ஏசுவார்கள்; எனவே, அரசியல் காரியங்களைப் பற்றி நான் உங்களிடம் ஒன்றும் அதிகமகச் சொல்லவில்லை. ஆனால், மாணவர்கள் தாங்களாகவே செய்யக்கூடிய பெருஞ்செயல்கள் நிறைய உண்டு

"பண்டைக்காலத்தில்—மன்னர்கள் ஆண்ட காலத்தில், நாட்டு மக்களின் நிலைமைகளைத் தெரிந்து கொள்ள மன்னர்களே மாறு வேடங்களில் ஊர் ஊராகச் சுற்றி வருவார்கள். இப்போதோ, மக்களுக்குத் தங்கள் குறைகளையெல்லாம் சர்க்காருக்கு நேரடியாகவே எடுத்துச் சொல்லும் உரிமை இருக்கிறது. ஒரு ஜனநாயக நாட்டில் அப்படித் தங்கள் கருத்துக்களை சர்க்காருக்கு எடுத்துத் தெரிவிப்பதுதான் மக்களின் முக்கியமான வேலையாகும். ஆனால் என்னைப் போல் அரசியலில் ஈடுபாடுகொண்டிருப்பவர்களெல்லாம் அதைத் துணிந்து செய்யப் பயப்படுகிறார்கள். ஏனென்றால் நாங்கள் எல்லாம் அப்படிச் செய்தால் மக்கள் எங்களைப் பார்த்து, எங்களுக்குப் பதவிப்பித்து பிடித்திருக்கிறது என்று கூறிப் பட்டமும் சூட்டிவிடுகிறார்கள். எனவேதான், மாணவர்களும் நேரடியாக அரசியலில் தொடர்புகொள்ளாவிட்டாலும், தங்கள் கருத்துக்களையாவது அவர்கள் எடுத்துச் சொல்லவேண்டும்—சொல்லமுடியும்; அந்த அளவில் மாணவர்களின் பெருஞ்செயல்கள் இருக்கவேண்டும்.

சென்னை சிம்சன் குருப்தொழிலாளர்

தி. மு. க. தேர்தல் நிதி செயற்குழு முடிவு

சென்னை, நவ. 14—

கடந்த 11-ந் தேதியன்று நடைபெற்ற சென்னை சிம்சன் குருப் தொழிலாளர் தி. மு. கழகத் தேர்தல் நிதிச் செயற்குழுக் கூட்டத்தில், அடுத்தத் திங்களில் பொதுக் கூட்டம் நடத்தித் தேர்தல் நிதி அளிப்பதென முடிவு செய்யப்பட்டிருக்கிறது

இதுவரையிலும் தேர்தல் நிதி உதவாத தொழிலாளத் தோழர்கள், சென்னை - சிந்தாதிரிப்பேட்டை, வாலர்ஸ் ரோடிலுள்ள 29-வது வட்டக் கிளைக் கழகப் பணிமனையில் தினமும் இரவு 7 மணி முதல் 8 மணி வரையிலும், பொருளாளரிடம் நிதி செலுத்தி ரசீது பெற்றுக் கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டது.

'அரிசி கிடைக்கவில்லை; விருந்து - நாட்டியம் ஏன்?'

பொதுமக்கள் ஆர்ப்பாட்டம்

காரைக்கால், நவ. 14—

கடந்த ஞாயிறன்று மாலை புதவை மாவட்டத் தலைமைக் கமிஷனர் அவர்களுக்குக் காரைக்கால் ஜோதி டாக்கீசில் பிரிவுபசார விழா ஒன்று நடைபெற்றது. அந்த விழாவில் கலந்துகொள்ள கமிஷனர் கேவல் சிங் சென்றபோது, அவர் செல்லவேண்டிய வழியில் ஏராளமான பொதுமக்கள் கூடிநின்று, 'எங்களுக்கு உணவும் அரிசியும் கிடைக்கவில்லை; உங்களுக்குத் தேநீர் விருந்தும் நாட்டியமும் ஏன்?' என்று கேட்ட வண்ணம் வழிநெடுக ஆர்ப்பாட்டம் செய்தனர்.

மக்கள் கூட்டத்தவரிடம் சிக்கிக் கொள்ளாமலிருக்க தாம் வர வேண்டிய வழியைவிட்டு வேறு வழியாகச் சென்று விழாவில் கலந்துகொண்டிருக்கிறார் கேவல் சிங்! (ந. நி)

பொதுக்கூட்டத்திற்கு அனுமதி மறுப்பு

காரைக்கால், நவ. 14—

விலைவாசி உயர்வைத் தடுப்பதற்கும், ஒவ்வொரு வட்டத்திலும் குறைந்த விலையில் மக்களுக்கு அரிசி கிடைப்பதற்கும் வழிசெய்ய, 9-11-56 அன்று காரைக்கால் நகரக் கழக உறுப்பினர்கள், தி மு கழகம், தி. கழகம். கம்யூனிஸ்டுக் கட்சி ஆகியவை போன்ற 15 அமைப்புகளின் பிரதி

(4-ம் பக்கம் பார்க்க)

தமிழ் நாட்டிற்கு 'தமிழ்நாடு' என்று பெயரில்லை

மாணவரும் மக்களும் வெட்கத்தோடு உணர வேண்டும்

மாணவர் தமிழ் மன்ற ஆண்டு விழாவில் டாக்டர் மு. வரதராசனர் கருத்துரை

12—11—56 மாலை சென்னை லயோலா கல்லூரியில் நடைபெற்ற சென்னை கல்லூரித் தமிழ் மன்ற இரண்டாவது ஆண்டுத் துவக்க விழாவில் பேசிய பேராசிரியர் டாக்டர் மு. வரதராசனர் அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கம் கீழே தரப்பட்டுள்ளது:-

"சென்னை நகரத்தைவிட தமிழ் நாட்டிலுள்ள மற்ற ஊர்கள் தமிழ் மன்ற அமைப்புகளைப் பொறுத்தவரையில் மிக முற்போக்கடைந்திருக்கின்றன. வெளியூர்களிலுள்ள சில கல்லூரிகளிலெல்லாம் இத்தகு மன்றங்கள் அமைத்து அவற்றின் ஆண்டு விழாக்களையெல்லாம் பெரும் பெரும் விழாக்களாகக் கொண்டாடுகின்றனர். இது, தமிழ் மாணவர்கள் தமிழ்மீது கொண்டுள்ள ஆர்வத்தையும் ஊக்கத்தையும் காட்டுகிறது.

"மொழிக்காக வழிபாடா? அதற்கெனத் தனித்தனி சங்கங்களா?— என்று மேலைநாட்டவர் நம்மைப் பார்த்துக் கேட்கின்றனர். அவர்களுக்கு இதெல்லாம் ஆச்சரியத்தைத்தான் கொடுக்கிறது. ஏனென்றால், அவர்களுக்கெல்லாம் இயற்கையாகவே தங்கள் தாய்மொழி மீது பற்றும் பாசமும், மொழி வளரக் கடமை உணர்ச்சியும் இருக்கிறது. அந்த உணர்ச்சி நம்மிடையே இல்லாதிருந்தது. எனவேதான், நாம் இப்போது தமிழ் மொழி வளர வேண்டுமென்பதற்காக இப்படி மன்றங்களை அமைத்துப் பாடுபடுகிறோம்.

"பிரான்ஸ் நாட்டவர்கள் எல்லாரும் தங்கள் மொழி வளர்ச்சிக்கென்று பாடுபட்டதே கிடையாது. தங்கள் பண்பாடு, இலக்கிய வளத்திற்காகத்தான் பாடுபட்டார்கள் என்பதை நாம் பார்க்கிறோம்.

"நமது மாணவர்கள் பள்ளிப் பாடத்துடன் இலக்கியங்களை முடித்துவிடக்கூடாது. புத்தகப் பாடம் முடிந்தபின் தங்கள் ஓய்வு நேரத்தில் தாங்கள் விரும்பின இலக்கியத்தை—புலவனை நன்றாக மேலும் கற்க விரும்பவேண்டும்.

"நமது சங்க காலப் புலவர்களெல்லாம் கல்லூரிகளில் சென்று படித்தவர்களல்ல! வணிகத்திலே ஈடுபட்டவர்கள் எத்தனையோ பேர்—கணக்காயர் மகன்தான் நக்கீரர்—இப்படிப்பட்டவர்கள் தன் நமது இலக்கியங்களை உருவாக்கியிருக்கிறார்கள். தங்கள் தொழில் நேரம் போக ஓய்வு நேரங்களில் எல்லாம் இலக்கிய ஆராய்ச்சி நடத்தி அதனுல் பல இலக்கிய நூல்களை உருவாக்கினவர்கள். அப்படிப்பட்ட நமது இலக்கியங்களெல்லாம், இசையைப் போன்று இன்பந்தருவனவாகும்.

"மாணவர்கள் அரசியலில் பங்கு பெறக்கூடாதுதான். ஆனால் இன்றிருக்கிற மாணவர்களாகிய உங்களிடையே எந்நேரமும் அரசியல்தான் இருந்துவருகிறது நமது நாட்டிற்குத் தமிழ் நாடு என்ற பெயரில்லையே என்று நாமெல்லாம் வருந்துகிறோம். இதை நாம் வெட்கத்தோடு உணரவேண்டும். மாணவர்கள்வெட்கத்தோடு உணர வேண்டிய செய்தி இது. என்றாலும் அந்த நிலை மாறுவதற்கு இன்னும் நெடுங்காலம் இல்லை

'இப்போதெல்லாம் மற்ற மாகாணங்களில் எவ்வளவோ மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. பூகோளத்தையே இப்போது மாற்றிப் படிக்கவேண்டிய அளவிற்கு மாற்றங்கள் ஏற்பட்டுவிட்டன. இவ்வளவு இருந்தும் இந்த நாட்டிற்கு சொந்தப் பெயர் இல்லையே என்பது காண வருந்துகிறோம். நாம் வருந்துகிறநேரத்திலேயே, அதனை மாற்றுவிக்கும் ஆற்றல் நமக்கு நிச்சயம் இருக்கிறதென்பதையும் மாணவர்கள் உணரவேண்டும் — நம்பவேண்டும். அந்தத் தன்னம்பிக்கையுடன் மாணவர்கள் முயற்சி செய்தால் இதெல்லாம் அவர்களுக்கு ஒரு சிறு காரியம்தான்.

"இன்றைய சமுதாயத்துறையை எடுத்துக்கொண்டால், நமக்கும் அமெரிக்கா போன்ற மேல்நாட்டுக்காரர்களுக்குமிடையே அதிக வித்தியாசத்தைக் காண்கிறோம். நாமும் அமெரிக்கரைப்போல் இல்லையே என்று நினைத்து நாம் ஏங்கி ஏங்கி வருந்துகிறோம். இந்த நிலைக்குக் காரணம் என்ன? இங்கு உண்மை பேசுபவன் வாழ முடியவில்லை — பொய் கூறுவதையே தொழிலாகக் கொண்டிருப்பவன் நன்றாக வாழுகிறான் என்ற நிலைதான். நல்லதைப் பொல்லாதெனவும், முடிந்ததை முடியாதெனவும் சொல்கிறவர்கள் வாழுகிறார்கள்; உள்ளதை உள்ளதாகச் சொல்பவர்கள் பிறரால் பழிக்கப்படுகிறார்கள். இதன் விளைவு என்ன? மக்களுக்கு வாழ்க்கையில் இன்னல்கள் விளைகின்றன; வாழ்க்கையை நடத்த முடியவில்லை.

"இத்தகுச் சிறுமைகளையெல்லாம் மாணவர்களாகிய நீங்கள்தான் மாற்றவேண்டும். ஏனென்றால் இளைஞர் உள்ளம் தூய உள்ளம். உள் ஒன்று வைத்துப் புறம் ஒன்று கூறாத தன்மையுடையது. அத்தகு உள்ளம் கொண்ட இளைஞர்களாகிய நீங்கள்தான் இந்த நாட்டை வாழ்விக்க வேண்டும்.

"ஒரு நாடு அமைதியாக வாழ இயற்கைக் கல்வி அறிவு அத்தனையும் அந்நாட்டின் தாய்மொழியிலேயேதான் போதிக்கப்பட வேண்டும்; தாய் மொழியினுல்தான் அவையெல்லாம் தடையின்றி நடைபெற முடியும். ஆங்கில மொழியும் போற்றப்படவேண்டிய ஒன்றுதான். ஆனால் அது பாடமாக இருக்கவேண்டுமே தவிரப் போதனு மொழியாக இருக்கக் கூடாது.

"நம் தமிழ் மொழியில் கலைச் சொற்கள் இல்லையே-விஞ்ஞானச் சொற்கள் இல்லையே என்று குறைபட்டுக் கொள்கிறார்கள். அந்தக் கலைச் சொற்களெல்லாம் என்ன—ஆங்கிலத்தின் தனிச் சொத்தா? ஆங்கிலமொழி மட்டுமென்ன?—ஜெர்மனி, பிரான்ஸ் போன்ற பல நாட்டு மொழிச் சொற்களையும் கொண்ட ஒரு மொழிதான். அப்படிப் பிறமொழிகளிலிருந்து எடுத்துக் கையாண்ட சொற்கள்மீது ஆங்கிலேயருக்கு மட்டும் உரிமையாகிவிடுமா?—நமக்கும்கூடத்தான் அந்த உரிமை உண்டு.

"விஞ்ஞானப் பாடங்களையெல்லாம் தமிழ் மொழியினுல் கற்றுக்கொள்ள முடியாதென்றால், இந்தி மொழியினுல் மட்டும் அது எப்படி முடியும்? நாம் எப்படி நம்ப முடியும்?

"தமிழிலே எல்லாவற்றையும் எழுதுவதற்கு வாய்ப்பும் உரிமையும் கிடைத்தால் இந்தத் தலைமுறையில் இல்லாவிட்டாலும் அடுத்தத் தலைமுறையிலாவது நிச்சயமாகத் தமிழ் மொழியிலேயே புத்தகங்கள் அனைத்தும் எழுதமுடியும். கலைச் சொற்களும், புத்தகங்களும் இல்லையே என்று குறைபட்டுக் கொள்பவர்கள் வாய்ப்புக் கொடுத்தால் அவையெல்லாம் தானுகவே வளரமுடியும். எனவே, இப்போதிருக்கிற நிலைமைகள்மீது யாரும் குறைகூற வேண்டாம். எதற்கும் தேவையை ஏற்படுத்துங்கள்."

பொதுச்செயலாளர் நல்லுரை

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

யில், ஒரு ஆண் யானையும் அதனுடன் ஒரு பெண் யானையும் நீர் அருந்தக் குட்டை அருகில் சென்று, அங்கு குறைந்த தண்ணீரே இருப்பதால் பெண் யானையை நீர் அருந்துமாறு ஆண் யானை கூறும் காட்சியையும்; நற்றிணைப் பாடலில்—ஒரு ஆண் மான் பெண் மானைத் தண்ணீர் அருந்தக் கேட்க, இருக்கும் தண்ணீர் ஒருவருக்கு மட்டுமே போதுமாதலால் ஆண் மானைக் குடிக்குமாறு பெண் மான் கேட்க, தான் குடித்துவிட்டால் பெண் மானுக்குத் தண்ணீர் கிடைக்காதே என நினைத்து ஆண்மான், குடிப்பதாகப் பாவனை செய்வதாகவும், பின்னர், ஆண் மான் நீர் அருந்திவிட்டது என்ற எண்ணத்துடன் பெண் மான் நீர் அருந்தின காட்சியையும், இதையெல்லாம் பார்க்கும் தலைவன் உடனே வந்துவிடுவான்; எனவே கலங்காதே' என்று தேற்றுவதையும்; புறநானூற்றுப் பாடலில்—தொண்டு கிழவர் ஒருவர் குட்டை அருகே வந்து நின்று தனது இளமைக் காலத்தில் தமக்கிருந்த இளமை உள்ளத்தை எண்ணி, 'அந்த உள்ளம் மீண்டும் வாராதா?' என்று ஏங்கி நிற்கும் காட்சியை துடித்தலை விழுந்தண்டினார் என்ற புலவர் வருணிக்கும் காட்சியினையும், இலக்கிய நயம்பட, 'இலக்கிய இன்பம் என்பது இன்னதுதான்' என்று கூடியிருந்தோர் அனைவரின் உள்ளத்திலும் பதியவைக்கும் வகையில் எடுத்துக் கூறினார்.)

உவமை அழகு!

"நமது இலக்கியங்கள், பண்டைக்கால ஆட்சி முறைகள் பற்றியும் கூறுகின்றன—பாலைவனம் ஒன்றில் பிணங்கள் கிடக்கின்றன; பிணங்களைக் கண்ட கழுகுகளும் வல்லூறுகளும் அவற்றைக் கொத்திக் கொத்திக் குடல்களையெல்லாம் வெளியே எடுத்துப் போடுகின்றன. புலவர் ஒருவர் பார்க்கிறார் இந்தக் காட்சியை! உடனே, கழுகுகளின் இந்தச் செய்கைக்கு உவமை ஒன்று கூறுகிறார்:—'பெரியவர்கள் கூடியிருக்கும் ஊர் மன்றத்தில், நடுவில் வைக்கப்பட்டிருக்கும் குடவினுள் கைவிட்டு ஓலைகளை எடுத்து வெளியே போடுவதுபோல் இருக்கிறது கழுகுகளின் செய்கை' என்கிறார். இது அக்கால ஆட்சி முறைக்கும் ஒரு எடுத்துக்காட்டு!

"இப்படிப் பல்வேறு கருத்துக்களும் நமது இலக்கியங்களில் அழகுற எடுத்துக்காட்டப்பட்டிருக்கின்றன. இந்த இலக்கிய நயங்களை எல்லாம் நாம் படித்து உணர வேண்டும். நமது இலக்கியக் காதைகளில் வரும் கருத்துக்கொவ்வாத கதைகளைப் போக்கிவிட்டாலும்கூட, கருத்தாழம், சொல்லாழம், அணிஅழகு ஆகியவை நிரம்பியிருக்கின்றதை நாம் காணலாம். தெய்வங்களைப்பற்றிக் கூறும் நமது இலக்கியப் பாடல்களில்கூட, உலகின் மற்றெந்த மொழியிலும் இல்லாத அளவிற்கு நமது தமிழ்மொழி இலக்கியத்தில் உருக்கமான சொற்களையும், உருக்கமான தன்மைகளையும் நாம் காண்கிறோம். தமிழ் மொழி ஒன்றில்தான் கொஞ்சும் சொற்கள் அதிகம்! அத்தகு நயம் படைத்த நமது இலக்கியங்கள் நமக்கெல்லாம் இன்பத்தை ஊட்டுகின்றன.

"அதுபோலவேதான் இந்த நூற்றாண்டிலும் பாரதியாரும், அவருக்குப்பின் பாரதிதாசனும் நமக்குப் பல இலக்கியங்களை உருவாக்கித் தந்திருக்கிறார்கள். அவர்களுடைய இலக்கியங்களில் காணப் பெறும் ஒரு சில தேன் துளிகளை மட்டும் சிதறவிட்டால், தேன் கூட்டையே பறிக்க வேண்டும் என்ற எண்ணம் உருவாகும் அளவிற்கு நீங்கள் உணர்ச்சி பெற்றுவிட முடியும்! அத்தகு இலக்கிய இன்பங்களையெல்லாம் ஒரு சில நாழிகைகளில் எடுத்துக் கூறிவிட முடியாது.

சொல்லேருழவர்கள்

"நம்முடைய புலவர்கள் ஆற்றல் மிக்கவர்கள்; நுண்ணிய கருத்துக்களையெல்லாம் கூடத் தெளிவுற எடுத்துக் காட்டும் வல்லமை பெற்றிருக்கிறார்கள். சாதாரணமாக தென்றல் காற்றைப்பற்றி நாமெல்லாம் கூறமுடியாத அளவிற்குப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் அழகாக — நயம்பட எடுத்துரைத்திருக்கிறார்.

புரட்சி இலக்கியம்!

"நம் நாட்டின் வாழ்க்கைக் கோணல்களையும், சமுதாயக் கொடுமைகளையும் பாரதிதாசன் அழகாக எடுத்துக் கூறியிருக்கிறார். ஒரு இளம் பெண்; சமுதாயக் கொடுமைக்கு ஆளாகி வயதான ஒரு கிழவருக்கு அவளை மண முடித்து வைக்கிறாள் அவள் தாய்; மணமக்கள் வேற்றூர் சென்றுவிட்டனர்! மகளைப் பார்க்க வேண்டுமென்ற ஆவலால் தாய் மகள் வீட்டுக்குச் செல்கிறாள்; மகளுடையவும் மருமகனுடையவும் இல்லற வாழ்க்கையைக் கண்டு களிக்கத் துடிக்கிறாள் தாய்; ஒருநாள் நள்ளிரவு; அவர்களிருவரும் இருந்த அறையின் வாயில் திறந்து கிடந்தது; 'மகளும் மருமகனும் இன்புற்றிருப்பார்களே—கதவு திறந்து கிடக்கிறதே—அதை மூடவேண்டுமே' என்று நினைத்தத் தாய் கதவை இழுத்துச் சாத்த அருகில் சென்றாள்; உள்ளேயோ, கண்ணிலிருந்து நீர் வழிய மகள் உட்கார்ந்திருந்தாள்; வாயிலிருந்து எச்சில் வழிய—பரட்டைத் தலையுடன் கிழவன் தூங்கிக்கொண்டிருந்தான்; இளமை எழில் காதல் ததும்ப மகள் கணவன் அருகில் இருப்பதாகத் தாய் நினைத்தாள்; ஆனால் மகளுடைய கண்கள் சிவப்பேறியிருந்தன; அவளுடைய சிவந்த கன்னத்தால் அருகிலிருந்த விளக்கின் ஒளியும் சிவந்தது; கிழவன் விழிப்பான் என்று ஏங்கியிருந்தாள்; திடீரென—வெடுக்கென எழுந்தாள் மகள்; அருகிலே கிடந்த செம்பு ஒன்றை எடுத்து வைத்துக்கொண்டு எதையோ நினைத்து அழுதாள்; சாய்ந்த செம்பிலிருந்து ஒழுகியதைப் பக்கத்தில் இருந்த பூனை ஒன்று நக்கிக்குடித்து இறந்து விழுந்தது; 'மனம் பொருந்தாத காரணத்தால் விஷம் குடித்துச் செத்தான் மருமகன்' என்று அறிந்ததும் அவள் தாய், 'மண்ணாகட்டும், மண்ணாகட்டும் மனம் பொருந்தா மணம்' என்றுகூறி, இந்த நாட்டின் சமுதாயக் கொடுமையைத் தூற்றுவதாகக் கூறுகிறார்.

"இப்படி எழுதப்பட்ட இந்த இலக்கியங்களெல்லாம், நாட்டு மக்களை உயர்வுக்குக் கொண்டுவரவும், நாட்டை நாடாக்கவும், மக்களை மக்களாக்கவும், வாழ்வை வாழ்வாக்கவும் பயன்படும்.

"இந்த நாட்டினை நல்லநிலைக்குக் கொண்டுவர, இருள் சூழ்ந்து கிடக்கும் இந்த நாட்டை ஒளிபெறச் செய்ய மாணவர்கள் ஊக்கம் கொண்டு பணியாற்றும் நல்ல தொண்டர்களாகத் தங்களை ஆக்கிக்கொள்ளவேண்டும்.

'நான் செய்தது என்ன?'

"'இந்த நாட்டின் நலிவை நீக்க நான் செய்த நன்மை என்ன? இந்த நாட்டின் வாழ்விற்காக என்னுடைய அறிவு, ஆற்றல் எந்த அளவிற்குப் பயன்பட்டது?' என்று மாணவர்கள் ஒவ்வொருவரும் தங்களுக்குத் தாங்களே கணக்குப் போட்டுப் பார்க்கவேண்டும். அந்த வகையான எழுச்சியும் எண்ணமும் கொண்டு இப்போதிருந்தே மாணவர்கள் தங்கள் வேலைகளைத் துவங்குவார்களானால், இந்தத் தலைமுறையில் இல்லாவிட்டாலும் இரண்டு மூன்று தலைமுறைகளுக்குப் பின்னுலாவது இந்த நாட்டின் நிலைமை சீர்பட்டுவிடும்.

"நேர்மை உள்ளத்தோடும், நாணயத்தோடும், ஊக்கமுடனும் உற்சாகத்துடனும், ஒழுங்காகவும் மாணவர்கள் தங்கள் வேலைகளைச் செய்ய வேண்டும். உள்ள உரமும் நெஞ்சுரமும், உடல் உரமும் கொள்ளவேண்டும் மாணவர்கள்! நம்மால் எதுவும் ஆகும்' என்ற நம்பிக்கை மாணவர்களுக்கு ஏற்பட்டால் தான் இந்த நாட்டின் நிலை மாறமுடியும்.

'இந்த நாட்டை நாடாக ஆக்கும் பெரும் பொறுப்பில் மாணவர்கள் ஈடுபடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்; இன்றிருக்கிற மாணவர் சமுதாயத்தவராகிய உங்களைப் பொறுத்தது தான் வருங்காலத் தமிழகத்தின் நிலை. எனவே, அத்தகு நிலையுடன் கூடிய வருங்காலத் தமிழகத்தை உருவாக்கும் உணர்வும் எழுச்சியும் கொண்டு மாணவர்கள் செயல்பட வேண்டுமென்று மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்."

சென்னையில் இடதுசாரி இளைஞர் முன்னணிப் பொதுக்கூட்டம்

17-11-56 மாலை 6 மணிக்கு, சென்னை—வண்ணை கல்லறை மைதானத்தில், சென்னை இடதுசாரி இளைஞர் முன்னணியின் சார்பில், தோழர் வே. அரசு தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர்கள் எச். டி. இராசா, காஞ்சி-கல்யாணசுந்தரம், ஆர். இராமநாதன், ஜி. இராசமன்னார் எம்.சி., எம். லஜபதி, எஸ். கே. தனுஷ்கோடி ஆகியோர் 'பொதுத் தேர்தலும் எதிர்க் கட்சிகளின் கடமையும்' என்பது பற்றிப்பேசுவர்.

தமிழக பிரிவினை நாள்விழா பொதுக்கூட்டங்கள்

18-11-56 மாலை 6-30 மணிக்கு காட்டுப்பாடி (வ. ஆ மாவட்டம்) தி. மு. கழகச் சார்பில், இராபர்ட்சன்பேட்டை உயர்நிலைப் பள்ளி எதிரில். தோழர் கல்புதூர் இலட்சுமணன் தலைமையில் தமிழகப் பிரிவினைநாள் விழா பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி சொற்பொழிவாற்றுவார்.

* * *

18-11-56 மாலை $6\frac{1}{2}$ மணியளவில் தூத்துக்குடி வ. உ. சி. மைதானத்தில் தோழர் சாகுல் அமீது தலைமையில் தமிழக அமைப்புநாள் விழா நடைபெறும். தோழர்கள் சி. பி. சிற்றரசு, எம். எஸ். சிவசாமி, கே. தாளமுத்து ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

* * *

17-11-56 மாலை கும்மிடிபூண்டி தி மு கழகச் சார்பில் தோழர் ப செ. தூயமணி தலைமையில் நடைபெறும். தோழர்கள் ஏ. சுமணி, தா. எல்லப்பன், ஆ. கிருட்டிணன், ஏ இராதாமணன் ஆகியோர் பேசுவர்.

சொற்பயிற்சிக் கூட்டம்

17-11-56 மாலை $6\frac{1}{2}$ மணிக்கு, சென்னை—சாலைவிநாயகர் கோயில் தெரு முத்தமிழ் மன்றப் பணிமனையில் தோழர் கா. மு. சீனிவாசன் தலைமையில் 'எதிர்க் கட்சி' எனுந் தலைப்பில் தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றுவர்.

பொதுக் கூட்டத்திற்கு...

(3-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

நிதிக்கூடி 'சர்வகட்சி விலைவாசி உயர்வுத் தடுப்புக் குழு' ஒன்றை நிறுவினர்.

அந்தக் குழுவினர், நிர்வாகிகளையும் பிரதம தலைமைக் கமிஷனரையும் பேட்டி காண்பதென்றும், 11-தேதியன்று சர்வகட்சிச் சார்பில் பொதுக்கூட்டம் நடத்துவதென்றும் முடிவு செய்து தங்கள் விருப்பத்தை அரசாங்க அதிகாரிகளுக்கு அறிவித்தனர்.

ஆனால் அரசாங்க அதிகாரிகளோ, பேட்டி காண்பதற்கோ, பொதுக்கூட்டம் நடத்துவதற்கோ இறுதி நேரம் வரையிலும் அனுமதி தராமல் மறுத்துவிட்டிருக்கின்றனர். (ந. — கி)

கழகக் கூட்டங்கள்

★

அணைக்கரை:
குகா டாக்கீசில்
தி. மு. கழகத் துவக்க விழா
19—11—56 மாலை 5 மணிக்கு
தலைவர்: தென்னவன்
பேசுவோர்:
இரா. நெடுஞ்செழியன்
பொ. தருமன்
ம. கோ. மணி

★

மணமேல்குடி:
அய்யனார் கோவில் திடலில்
18-11-56 மாலை 4-30 மணிக்கு
பேசுவோர்:
என். வி. நடராசன்
ஜி. எஸ். மணி

★

திருப்பூர்:
இராயபுரத்தில்
18—11—56 மாலை 6 மணிக்கு
தலைவர்:
பி. என். பாலசுப்பிரமணியம்
பேசுவோர்:
கோவை-செழியன்
க. அன்பரசு
மு. முத்துரத்தினம்

★

இலங்கை-பொரளை:
சின்னபொரளை பௌத்தபெண்கள் பாடசாலை மண்டபம்
(கே. வி. கே. சாமி அரங்கில்)
கிளைக் கழக 3-ம் ஆண்டு நிறைவுவிழா
17—11—56 மாலை 3 மணிக்கு
தலைவர்:
ஏ. எஸ். சண்முகநாதன்
பேசுவோர்:
கி. மனோகரன்
இரா. அதி. மணி

★

கொத்தவாச்சேரி:
17—11—56 மாலை 5 மணிக்கு
தலைவர்: கு. த. பெ. பழனி
பேசுபவர்:
என். வி. நடராசன்

'சிற்பியின் காதல்'—நாடகம்

17-11-56 இரவு 9 மணியளவில் ஆரணி (பொன்னேரி வட்டம்) பெருமான் கோவில் அருகில், 'சிற்பியின் காதல்' நாடகத் துவக்க விழா தோழர் ஒய். குப்புசாமி அவர்கள் தலைமையில் நடைபெறும். தோழர்கள் கா. நெடுமாறன், கு. துரைக்கண்ணு, கோ. வெற்றிவீரன் ஆகியோர் பேசுவர்.

நிலக்கோட்டை வட்டார விவசாயிகளுக்கு

வேண்டுகோள்

"கடந்த மூன்றாண்டுக் காலமாக மழையில்லாமல் விவசாயம் செய்யமுடியாது கஷ்டப்பட்ட விவசாயிகளுக்கு 5 வருடத் தவணைகளில் கடன் கொடுக்க சர்க்கார் முன்வந்தது; எனினும் கிணறுகளில் தண்ணீர் இல்லாததால் தவணைப்படி விவசாயிகள் கடன் கட்டமுடியாத நிலையடைந்தனர். இப்போது மழை பெய்ததும், சர்க்கார், கொடுத்த கடனை வசூலிப்பதில் தீவிரமாக இறங்கியிருக்கின்றனர். நிலம் ஒன்றைத் தவிர மற்ற அசை பொருள்கள் அனைத்தையும் சர்க்கார் ஜப்தி செய்து வருவதால் விவசாயம் செய்யமுடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்நிலையில் சொஸைட்டியின் கடனும் ஒருபுறம் பயமுறுத்துகிறது. இந்த நிலைமைகளையெல்லாம் மாற்ற, மதுரை மாவட்டக் கலெக்டரிடம் நிலையை எடுத்துக் கூறி தவணைக் காலத்தை மேலும் நீடிக்குமாறு கேட்டுக்கொள்ள வேண்டியிருப்பதால், நிலக்கோட்டை வட்டார விவசாயிகள், நிலக்கோட்டை தி. மு. கழகத்தின் ஆதரவில் 18—11—56 பகல் 3 மணிக்கு இவ்வூர் அகிலம் மருத்துவ விடுதியில கூடிப் பேசவிருப்பதால், வட்டாரத்தைச் சேர்ந்த விவசாயிகள் அனைவரும் வந்து ஆலோசனை வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்"

என்று, மதுரை மாவட்ட தி. மு. கழகப் பொருளாளர் தோழர் ஈ. காத்தான் அறிவிக்கிறார்.

சென்னை 43-வது வட்ட தி.மு.க. செயற்குழு உறுப்பினர்கட்கு:

17-11-56 இரவு $8\frac{1}{2}$ மணிக்கு, சென்னை — மீர்சாகிப்பேட்டை 43-வது வட்ட தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம் கழகப் பணிமனையில் நடைபெறும். பல முக்கியப் பிரச்சினைகள் ஆய்வுக்கெடுத்துக்கொள்ளப்படும்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.